

மணிவாசகரின்...



மதுரவாசகங்கள்

(திருவாசகத் தொகுப்பு)



ஓம்சக்தி!

அருள்திரு அடிகளாரின் 54-வது அவதார காலத்தில் துவங்கும் சக்தியுகத்தில் தங்களின் 9-ம் ஆண்டை துவக்கும் ஓம்சக்தி பிரிண்டர்ஸ் நிறுவனத்தில் இவ் வெளியீட்டை அம்மாவின் திருப்பாதங்களுக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்.

சக்தி தொண்டன்,
ஓம்சக்தி பிச்சைமுத்து

மணிவாசகரின்...

மதுர வாசகங்கள்

(திருவாசகத் தொகுப்பு)

தொகுத்தவர் :
முத்து. சிவப்பிரகாசம் எம்.ஏ., பி.எட்., எம்.ஏ;
நெடுவயல்.

வெளியிடுவோர் :
ஓம்சக்தி பிரிண்டர்ஸ் & ஜெராக்ஸ்
ஆவுடையார்கோவில்.

ஓம்சக்தி!

உலகமெலாம் சக்திநெறி ஓங்கவேண்டும்
ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்கவேண்டும்.

மூலமந்திரம்

ஓம்சக்தியே பராசக்தியே
ஓம்சக்தியே ஆதிபராசக்தியே
ஓம்சக்தியே மருவூர் அரசியே
ஓம்சக்தியே ஓம் விநாயகா
ஓம்சக்தியே ஓம் காமாட்சியே
ஓம்சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே

ஓம்சக்தி!

குருவடி சரணம்! திருவடி சரணம்!

பதிப்புரை

அருள்திரு அடிகளார் அவர்களின் 54-ஆம் அவதார காலத்தில் ஏதாவது ஒன்று நினைவாக செய்ய வேண்டும் என்று எண்ணிய நேரத்தில் 'மணிவாசகரின் மதுர வாசகங்கள்' என்ற திருவாசகத் தொகுப்பை தொகுத்து வெளியிட உதவிய சக்தி திரு சிவப்பிரகாசம் அவர்களுக்கும் மேலும் இப்புத்தகம் வெளிவர உதவிய அனைவருக்கும், வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் அன்னை ஆதிபராசக்தியின் அவதாரம் அடிகளாரின் அருளாசி கிடைக்கவும், 3-3-95 முதல் துவங்கும் சக்தியுகத்தில் அனைவரும் எல்லா நலமும் வளமும் பெறவும் இறைஞ்சுகின்றேன்.

அன்னையின் தொண்டன்,
ஓம்சக்தி பிச்சைமுத்து

நூன்முகம்

இமைப்பொழுதும் நம் நெஞ்சில் நீங்கா இறைவன் திருவடியை, திருவுருவை, பெருங் கருணையைப் போற்றிப் பரவுவது திருவாசகம். கன்னெஞ்சையும் கரைக்க வல்லது திருவாசகம்.

திருவாசகம் முழுமையும் படிக்க இயலாது போயினும் நெஞ்சை நெகிழ்விக்கும் திருவாசகத் தேன் துளிகள் சிலவற்றைத் தொகுத்து மணிவாசகரின் மதுர வாசகங்கள் எனும் தலைப்பில் ஒரு சிறு புத்தகமாக, தினமும் ஓதிப் பயன்பெறும் வகையில் வெளியிட வேண்டும் என்பது மணிவாசகர் அருள்நெறி மன்றத்தின் பேரவா. அந்தப் பேரவாவை ஆவுடையார்கோவிலுக்கு அருகே உள்ள பாண்டிபத்திரம் ஊரைச் சேர்ந்த இராமையா உடையாரின் குமாரர் ஓம்சக்தி பிச்சைமுத்து அவர்கள் சொந்தச் செலவில் இப்புத்தகத்தை ஓம்சக்தி நிறுவனத்தின் ஒன்பதாம் ஆண்டின் நினைவாக அச்சிட்டு, வடிவமைத்து நிறைவேற்றி இருக்கிறார்கள்.

மேல்மருவத்தூர் அடிகளாரைப் போற்றி ஆண்டு தோறும் அன்னாரது பிறந்தநாளில் அன்னதானம் வழங்கியும் பள்ளி இறுதித்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்கட்குப் பரிசுகள் நல்கியும் இலவசமாக கண் சிகிச்சை முகாம்கள் ஏற்படுத்தியும் பல நற்காரியங்கள் செய்து வருகின்றார்கள்.

அவர்கள் எல்லா நலமும் வளமும் பெற்று பல அறப் பணிகள் செய்ய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருவாசகப் பதிகங்கள் சிலவற்றில் சில பாடல்களை மட்டும் தொகுத்துத் தந்துள்ளோம்,

திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி, திருவுந்திடார் போன்ற பகுதிகளை பல ஆன்றோர்கள் கண்ணோக்கில் விளக்கங்களுடன் தொகுத்து வெளியிட உள்ளோம். சிவநேயச் செல்வர்கள் பிழை இருப்பின் குறைநீக்கி, அந்தக் குறைவிலா நிறைவைப் போற்றிப் பயன்பெற தில்லைச் சிற்றம்பலவன் திருவடி சிந்திக்கின்றோம்.

அன்புடன்,

முத்து. சிவப்பிரகாசம்
எம்.ஏ.பி.எட்., எம்.ஏ,
நெடுவயல்.

கயிலை மாமுனிவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர் காசிமடம்
திருப்பனந்தாள்
தஞ்சை மாவட்டம் - 612 504.
நாள்: 19-1-1995

'அழுது அடியடைந்த அன்பர்'

மணிவாசகப் பெருமானின் மணி மொழிகள் கனிவு மிக்கவை. கல்லையும் கரையச் செய்பவை. அதிதகு மேன்மைமிகு மணிவாசகத்தை மாணவர்க்குத் தக்க வகையில் வழங்கும் முயற்சி சிறந்திடச் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்,

சிவ சிவ.

மணிவாசகரின்....



....மதுர வாசகங்கள்

வாதவூரடிகள் வரலாறு

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நிழல்வாயுண்ட நிகரில் ஆனந்தத்
தேன் தேக் கெறியும் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்.

- சிவப்பிரகாசம்.

பெருகும் வையை தனை அழைப்பிக்குமே பிரம்படிக்குப் பிரான் மேனி கன்றுமே
நரியெலாம் பரியாக நடத்துமே நாடி மூகைதனைப் பேசுவிக்குமே
பரிவில் பிட்டுக்கு மண் சுமப்பிக்குமே பரமன் ஏடு எழுதக் கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே வாதவூரர் வழங்கிய பாடலே.

திருவாதவூரினில் அந்தணர் ஒருவருக்கு மகவாக அவதரித்தார் மணிவாசகப் பெருமான். திருவாதவூரர் என்ற திருநாமத்தில் எல்லா கலை-களையும் கற்றுத் தேர்ந்தார். தமது பதினாறாவது வயதில் உற்றது கொண்டு உறுபொருள் உணரும் தன்மையர் ஆயினார். இவரது அறிவுத் திறமையை அரசன் அரிமர்த்தன பாண்டியன் அறிந்து கொண்டான். ஆட்களை அனுப்பி அழைத்து வந்து மந்திரி ஆக்கினான். தென்னவன் பிரமராயன் எனப் பட்டமும் சேர்ப்பித்தான்.

திருவாதவூரரின் அரசியல் வாழ்க்கை அமைதியாக இருந்தாலும், உலக வாழ்வும் வாழ்வில் கண்ட பெரும் போகமும் நிலையற்றன என்பதை உணர்ந்தபின் உவப்பதாயிற்று. குருவினால் வாழ்வு நிலைபெற வேண்டும் எனத் தோன்ற குருவைத் தேடும் பணியும் தொடர்ந்தது.

ஒருநாள் காவலர்கள் அரசவைக்கு வந்து குதிரைகள் வாங்க வேண்டும் என்றும், மன்னர்க்குக் குதிரைப்படை அவசியம் என்றும், குதிரை கொள்வதற்கு இதுவே ஏற்ற காலம் என்றும், அரசருக்கு இதனை அறிவிப்பது தங்கள் கடமை என்றும் மன்னரிடம் தெரிவித்தனர்.

அரிமர்த்தனன் தென்னவன் பிரமராயனை நோக்கி, இப்பொழுதே குதிரைகள் வாங்கி வருக எனப் பணிக்க, அமைச்சரும், அரண்மனையின் பொற்பண்டாரத்தை திறந்து பெரும் பொருளை வாரிக்கொண்டு குதிரைகள் வாங்கப் புறப்பட்டார்.

திருவாதவூரரின் வருகையறிந்த பெருமான் திருப்பெருந்துறையிலே குருவடிவாகிக் குருந்தமர நீழலில் எழுந்தருளி காட்சியளிக்கக் காந்தத்தைக் கண்ட இரும்புபோல் திருவாதவூரர் உளம் கனிந்தார். இமைப்பொழுதும் தம் நெஞ்சை விட்டகலாதான் தாள் பணிந்தார்.

இறைவன் தமது அருட்கண் நோக்கியும் திருக்கரம் தீண்டியும், திருவடி சூட்டியும் ஞானோபதேசம் செய்வித்து அருள, திருவாதவூரர் தன் ஆவியும், உடலும் உடமை எல்லாமும் அவர் வசமாக்கினார். தாமே வந்து தமது உள்ளம் புகுந்து ஆட்கொண்ட பெருமையில் பரிகள் வாங்கும் பணியை மறந்தார். கொண்டு வந்த பொருள் எல்லாம் சிவன் தந்தது என சிவனுக்கே ஆக்கினார். நாட்கள் நகர்ந்தன.

அமைச்சரின் அருள் வாழ்க்கையை அரசு அறியுமா. அமைச்சரின் நிலையை மற்றவர் மன்னருக்கு எடுத்துரைத்தனர். மன்னன் கோபப்பட்டு மதுரைக்குக் குதிரையோடு வரும்படி கட்டளையிட்டான். அமைச்சர் ஆலயம் சென்று ஆண்டவனை வேண்ட ஆவணி மாதம் மூல நன்னாளில் குதிரைகள் மதுரை வரும் எனப் பணிக்க அவ்வாறே குதிரைகள் வந்தன. பின்னர் அவையெல்லாம் நரிகளாகி மறைந்தன.

இவற்றையறிந்த அரசன் மணிவாசகப் பெருமானை சுடுமணலில் நிறுத்தி கல்லேற்றி ஒறுத்தனன். அடிகளார் பொறுத்தார். ஆண்டவன் வெறுத்தான். வைகை ஆற்றில் வெள்ளம் பெருகியது. மதுரை அழியுமோ என எல்லோரும் ஐயுற்றனர். அவரவர் கரையை அவரவர் அடைத்துக் கொள்ள ஆணையிட்டான். வந்தி எனும் பிட்டு விற்பவள் பங்கை அடைக்க ஆளில்லை.

சிவபெருமான் கூலி ஆளாய்க் குவலயம் வந்து பிட்டை உண்டு வையைக் கரையை அடைப்பார் போல உண்ட களைப்பால் உறங்கிக் கழித்தார். இதனையறிந்த அரசன் இறைவன் இருப்பிடம் சென்று கடுஞ்சினத்தால் கைப்பிரம்பு கொண்டு கடவுளை அடிக்க எல்லா உயிரினங்களும் ஆவென அலறின.

மணிவாசகர் பொருட்டு பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படியால் உடம்பில் புண் சுமக்க வந்தவன் பெருமானே என்பதை உணர்ந்த மன்னன் அவரை வணங்கி ஆலயம் கட்ட ஆவன செய்தான். அதன்பின் வாதவூரடிகள் திருப்பெருந்துறை, திருஉத்தரகோசமங்கை, திருவாரூர், திருவிடைமருதூர், முதலிய தலங்களை வணங்கிப் பதிகங்கள் பாடிக் கொண்டு தில்லையை அடைந்தார். புத்தர்களை வாதில் வென்றார்.

இறைவன் அந்தணர் வடிவுகொண்டு மணிவாசகர் பாடிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எழுதிக் கைச் சாத்திட்டுக் கனகசபையில் வைத்து மறைந்தார். இதனைக் கண்ணுற்ற அந்தணர்கள் அடிகளாரை அணுகி பொருள் உரைக்குமாறு வேண்டினர். வாதவூரடிகளோ இதன் பொருள் அம்பலவாணன் அடியிணையே என நடராஜப் பெருமானைக் காட்டி அவரோடு இரண்டறக் கலந்தனர்.

திருவாசகச் சிறப்பு

செய்ய வார் சடைத் தெய்வசிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப
பாவெனப் பாடுவது உன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே.

- சிவப்பிரகாசர்.

திருவாசகத்தை ஓதுந்தோறும், நினைக்குந்தோறும் நெஞ்சம் நெக்குருகக் கண்ணீர் பெருக நாவுரை குழற மெய்ம்மயிர் சிலிர்ப்பப் பேரின்ப வெள்ளங் கிளர்ந்து எழுதல் யாவர் மாட்டுங் காணப்படுதலானும், தொடர்பு பட்டு நிகழும் இத்தகைய பேரின்ப நிகழ்ச்சி மற்றை நூல்களை ஓதுவார் நினைப்பாரிடத்துக் காணப்படாமையானும் இத்திருவாசகம் ஒன்றே ஏனை நூல்களுக்கு இல்லாத அழகினை உடைத்து என்பதும் தெளியப்படும்.

- மறைமலை அடிகள்.

சைவத்திருமுறை 12 இவற்றுள் எட்டாவது திருமுறை திருவாசகம். அது சிகாமந்திரம் எனப்படும். சிகைக்குமேல் உறுப்பில்லை. திருவாசகத்திற்கு மேம்பட்ட நூலும் இல்லை. தேன் பல்லாண்டுகளாயினும் தான் கெடாது. தான் கெடாததோடன்றி தன்னில் விழுந்த பழம் முதலியவற்றையும் கெட விடாது. அதுபோல் திருவாசகம் தானும் அழியாது. தன்னை ஓதுவாரையும் அழிவற்ற தன்மையில் இருத்தும்.

- திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

திருவாசகம் தமிழகத்தின் தவநூல், ஞானுப்பநுவல், பக்திப் பெருநூல், தத்துவக் கருவூலம், அறிவுக் களஞ்சியம், உயர்ந்த உள்ளத்தில் இருந்து எழுந்த உயர்ஞான மொழிகள், அறிவாற் சிவமேயாய மணிவாசகரின் மணி மொழிகள், பிறவிப்பிணி தீர்க்கும் பெருமருந்து. நெஞ்சை நெகிழ்விக்கும் செந்தமிழ்ப்பாட்டு, திருவாசகத்தின் பெருமையைப் பேசச் சொற்கள் தடைப்படுகின்றன, ஓதி உணர்ந்து அனுபவியுங்கள்.

- தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்.

மணிவாசகர் புகழ் மாலை

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லில்கங்குல்
பொழுதரு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமீது ஏறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி
அழுது அடி அடைந்த அன்பன் அடியவர்க்கு அடிமை செய்வாம்.

பரஞ்ஜோதி முனிவர்.

பெருந்துறையில் சிவபெருமான் அருளுதலும், பெருங்கருணைப் பெற்றிநோக்கிக்
கரைந்து கரைந்து இருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்துபோந்து
திருந்து பெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிச்
செம்மாந்து
இருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூர் அடிகள் அடியிணைகள் போற்றி

சிவஞான முனிவர்.

வாட்டமிலா மாணிக்கவாசக நின் வாசகத்தைக்
கேட்ட பொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நானடைதல் வியப்பன்றே.

இராமலிங்க சுவாமிகள்.

திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

உ சிவமயம்

சிவபுராணம் (சிவனது அநாதி முறைமை)

திருப்பெருந்துறையில் அருளியது

வாழ்த்தும் வணக்கமும்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க.
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!
ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!

வரு பொருள் உரைத்தல்

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி,
சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை,
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்-
கண் நுதலான் தன் கருணை கண்காட்ட வந்தெய்தி,
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி.

அவையடக்கம்

விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெரும் சீர்,
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்.

சென்ற நிலைகளும் - இன்றைய நிலைகளும்

புல் ஆகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்!
மெய்யே, உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்.

பொய் அகல வந்த மெய்ச்சுடர்

உய்ய, என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா, விமலா, விடைப்பாகா வேதங்கள்.
ஐயா, என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமானனாம் விமலா!
பொய் ஆயின எல்லாம் போயகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஐந்தொழில்

ஆக்கம், அளவு, இறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்.

சிந்தனையுள் ஊறும் தேன்

நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே!
கறந்தபால், கன்னலொடு, நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று,
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்.

மாய இருள் போக்கிய மாசற்ற சோதி

நிறங்கள் ஓர் ஐந்துடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை,
அறம் பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி,
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை,
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலம் தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!

ஆட் கொண்ட பெருங் கருணை

தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!

நேச அருள் புரிந்து, நெஞ்சில் வஞ்சம் கெட,
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்னிருளே, தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே!
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றின்ப வெள்ளமே! அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்!
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே! உடையானே!

இத் தெய்வப் பாடலைப் பயில்வோரும்

பயிலும் திறனும் பயனும்

வேற்று விவகார விடக்குடம்பின் உட்கிடப்ப,
ஆற்றேன் எம் ஐயா, அரனே ஓ என்று என்று,
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்,
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே தென் பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

திருச்சதகம் (பக்தி வைராக்கிய விசித்திரம்)

(திருப்பெருந்துறை)

1. மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார் கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே,

2. நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு உனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம் உடையானே,

3. ஆமாறுன் திருவடிக்கே அகம் குழையேன் அன்புருகேன்,
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே!

4. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே!

5. வாழ்கின்றாய்! வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.

6. சிந்தனை நின் தனக்காக்கி, நாயினேன்தன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு உன்
மணி வார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தெனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச் சுடரே இரண்டும் இல் இத்தனியனேற்கே.

7. ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவு தோறலறிலை செய்வதொன்றறியேனே.

8. தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி!

9. யானே பொய்யென் நெஞ்சும் பொய்யென் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே?
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனை வந்துறுமாறே.

நீத்தல் விண்ணப்பம் (உத்தரகோச மங்கை)

10. கடையவனேனைக் கருணையினால் கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே.

11. பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடியேனை விடுதி கண்டாய் விடிலோ கெடுவேன்
மற்றடியேன் தன்னைத் தாங்குநர் இல்லையென் வாழ்முதலே
உற்றடியேன் மிகத்தேறி நின்றேன் எனக் குள்ளவனே.

திருவம்மானை (திருவண்ணாமலை)

12. பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

13. துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான் செம்மேனியான் வெண்ணீற்றான்
அண்ட முதலாயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழ அடியார்க்கு ஈந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய்.

14. விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

15. சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்.

திருக்கோத்தும்பி (சிதம்பரம்)

16. தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி.

17. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணைச்
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

18. வைத்த நிதி பெண்டீர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பு என்னும்
சித்த விவகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

19. நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனதுள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

20. பூமேல் அயனொடு மாலும் புகல் அரிதென்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனியானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருத்தெள்ளேணம் *(தில்லை)*

21. திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒரு நாமம் ஒரு ருவம் ஒன்று மில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ,

22. வான் கெட்டு மாருதம் மாய்ந்தழல் நீர் மண்கெடினும்
தான்கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டேன் உள்ளமும் போய்
நான் கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

23. குலம்பாடிக் கொக்கிறகும் பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்டவாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ.

திருப்பூவல்லி *(தில்லை)*

24. இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
அணையார் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

25. வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம் பெருமான்
அணங்கொடு அணி தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.

26. சீரார் திருவடித் திண் சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடம்செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ.

கோயில் மூத்த திருப்பதிகம் *(தில்லை)*

27\. உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையான் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

28\. சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறு இருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும் தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயே.

கோயில் திருப்பதிகம் *(தில்லை)*

29\. குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெறா நீர் போல் சிந்தைவாய்ப்பாயும்
திருப்பெருந்துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடம் கொண்டாய்
இனி உன்னை என்னிரக்கேனே.

30\. இன்றெனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை

சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற்பாரே.

31. சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமாகடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்து நின் இணையடி தந்தே.

32. தந்தது உன்தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே.

அடைக்கலப்பத்து *(திருப்பெருந்துறை)*

33. வழங்குகின்றாய்க்கு உன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன் என் விதியின்மையால்
தழங்கரும் தேன் அன்ன தண்ணீர் பருகத் தந்து உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே

வாழாப்பத்து *(திருப்பெருந்துறை)*

34. பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கு எடுத்துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே.

35. பாவநாசா உன் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
தேவர் தம் தேவே சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
மூவுலகு உருவ இருவர் கீழ் மேலாய்
முழங்க அழலாய் நிமிர்ந்தானே

மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே.

அருட்பத்து *(திருப்பெருந்துறை)*

36. சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால் கொள் வெண்ணீற்றால்
பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தம் மேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

37. நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டு அலறி
உலகெலாம் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

38. எங்கள் நாயகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்

தங்கள் நாயகனே தக்க நற்காமன்
தனது உடல் தழலெழ விழித்த
செங்கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அங்கணா அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

39. முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர் பறித்து இறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்து அருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

40. திருந்துவார் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
இருந்தவாறு எண்ணி ஏசறா நினைந்திட்டு
என்னுடை எம்பிரான் என்றென்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றருளாயே.

திருக்கழுக் குன்றப் பதிகம்

41. பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான் உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாததோர் இன்பமே வரும் துன்பமே துடைத்து எம்பிரான்
உனக்கிலாததோர் வித்து மேல்விளை யாமல் என் வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய்க் கழுக் குன்றிலே.

42. பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு நாயினுங் கடையாய வெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து காட்டினாய் கழுக் குன்றிலே.

கண்ட பத்து (தில்லை)

43. உருத் தெரியாக் காலத்தே உள்புகுந்து என் உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன் புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டேனே.

பிரார்த்தனைப்பத்து (பெருந்துறை)

44. கலந்து நின்னடியா ரோடு அன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர் பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே உலவா இன்பச் சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள் செய்யாய் ஆர்வம் கூர அடியேற்கே.

குழைத்தபத்து (பெருந்துறை)

45. வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உந்தன் விருப்பன்றே.

46. அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.

திருப்பாண்டிப்பதிகம் (பெருந்துறை)

47. காலம் உண்டாகவே காதல் செய்து உய்ம்மின் கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டான் எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே.

பிடித்த பத்து (திருத்தோணிபுரம்)

48. உம்பர்கட்கரசே ஒழிவற நிறைந்த யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்து என் குடி முழுது ஆண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே சீருடைக் கழலே செல்வமே சிவபெருமானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது
இனியே.

49. அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவ பெருமானே
இமையே உன்னைச் சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது இனியே

50. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது இனியே.

51. புன்புலால் யாக்கை புரை புரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்து என்
என்பெலாம் உருக்கி எளிமையாய் ஆண்ட ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக்கெலாம் அறுத்த நற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது இனியே.

திருவேசறவு *(பெருந்துறை)*

52. நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒருத்தன்றே வெறுத்திடவே.

திருப்புலம்பல் (திருவாரூர்)

53. உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.

திருவெண்பா (பெருந்துறை)

54. முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணையாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து

55. இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

ஆனந்த மாலை (தில்லை)

56. தாயாய் முலையைத் தருவானே தாராது ஒழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன் தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய் நான்தான் வேண்டாவோ.

57. நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையொலாம் பிச்சதேற்றும் பொருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ செய்வதொன்றும் அறியேனே.

அச்சோப்பதிகம் (*தில்லை*)

58. முக்தி நெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

59. செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்பை எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்.



வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க. மலிவளம் சுரக்க
மன்னன் கோன் முறை அரசு செய்க. குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகெலாம்.

—★—

பிழை திருத்தம்

பக்கம்	பாடல்	வரி	திருத்தம்
21	18	3-வது	சித்தவிகாரக்
23	27	1-வது	நடுவிருக்கும் உடையாள்
30	49	4-வது	இம்மையே உன்னை
30	52	4-வது	ஒறுத்தன்றே
32	57	2-வது	பெருந்துறையாய்
32	59	2-வது	முதல்வன் தாள்
32	59	4-வது	அம்மை

ஆதிபராசக்தி வாழ்த்து

எண்ணருங் கலைகள் வாழி!
"இறைவன் நான்" என்னல் வாழி
உண்ணிறை சக்தி பீடம்
ஓமெனும் ஒலியில் வாழி!
கண்ணிறை மணியே யான
கருமறைப் பொருளே வாழி!
தெண்டிரை உலகமெல்லாம்
விண்டுளை வாழி! வாழி

ஓம்சக்தி!

அச்சிட்டு வெளியிடுவோர் :

ஸ்ரீ சக்தி பிரிண்டர்ஸ் ஜெராக்ஸ்

திருப்பெருந்துறை (ஆவுடையார்கோவில்)